CS (Main) Exam:2015

C–AVZ–O–UBNC

# TAMIL

## (Compulsory)

*Time Allowed : Three Hours*

*Maximum Marks : 300*

**QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS**

**Please read each of the following instructions carefully before attempting questions.**

All questions are to be attempted.

The number of marks carried by a question/part is indicated against it.

Answer must be written in **TAMIL** (Tamil Script) unless otherwise directed in the question.

Word limit in questions, wherever specified, should be adhered to and if answered in much longer or shorter than the prescribed length, marks may be deducted.

Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.

---

Q.1. **பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்து 600 சொற்களில் கட்டுரை வரைக :—** **100**

Q. 1(a) இளைஞர்களிடையே மன அழுத்தம் அதிகமாகி வருதல்.

Q. 1(b) தோல்வி என்பது வெற்றிக்கான ஒரு படிக்கட்டு ஆகும்.

Q. 1(c) படிக்கும் பழக்கம் வீழ்ந்து வருகிறதா?

Q. 1(d) சமூகத்தில் நிலவும் மூட நம்பிக்கைகளுக்கு எதிராகப் போரிடுதல்.

Q.2. **பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து அடியிற் காணும் வினாக்களுக்குத் தெளிவான, சரியான, சுருக்கமான விடைகளை எழுதுக :—** **12×5=60**

இந்தியாவின் கல்லூரிகளில் படித்து வெளியே வருபவர்களுள் 80% பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இளந் தலைமுறையினரோடு தொடர்புள்ளவன் என்பதால் நான் அந்தப் புள்ளி விவரத்திற்கு உடன்பட முடியவில்லை. இளைஞர்களோடு கலந்துரையாடியதால் அவர்களுள் 90% பேர் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்று என்னால் சொல்ல முடிகிறது. இந்நிலைக்குக் காரணம் அவர்களுடைய பொறுப்பற்ற தன்மையும் எதையும் நேரடியாக எதிர்கொள்ளாமல் விலகி ஓடும் பண்புமே ஆகும். இதே போன்று தீய பழக்கங்களை நம்பிக்கை என அவர்கள் தவறாக உணரத் தலைப்பட்டு விட்டனர். எதையும் செய்ய விரும்பாமல் ஏராளமாய்ப் பணம் சம்பாதிக்கவே அவர்கள் விரும்புகிறார்கள்.

அவர்கள் பயன் அற்றவர்கள் என்று இதற்குப் பொருள் இல்லை, பெரும்பாலோர் ஆங்கிலம் நன்கு பேசுகின்றனர். அதனால் அவர்களுக்கு தங்கள் மீது நம்பிக்கையாக உள்ளனர். அண்மைய செல்பேசி அழைப்பொலிகள் பற்றி நன்கு தெரிந்து வைத்துள்ளனர். அவ்வாறே திரைப்படங்கள், நகைச்சுவை பற்றியும் நன்கு தெரிந்து வைத்துள்ளனர். அவர்களுக்கு மேல் ஒருவர் சென்றால் வறண்ட கண்களோடு என்னை முறைக்கிறார்கள். ஊடகத் துறையினரின் சம்பாத்தியம், சம்பள அளவு மதிப்பீடு பற்றி முறையாகப் பத்திரிக்கைகளில் வரும் செய்தி ஆகியவற்றைப் பார்த்து அதிகம் சம்பாதிக்க வேண்டும் என்கிற ஆசை இளைஞர்களிடையே உள்ளது; ஆனால் அவ்வாறு பணம் ஈட்ட உதவவல்ல திறன்கள் அவர்களிடம் இல்லை. அவர்களுடைய பட்டங்கள் சந்தேகத்திற்கு இடமானவை. அவர்கள் பட்டம் பெற்ற பாடல்களில் சில கேள்விகளைக் கேட்டுப் பாருங்கள். பெரும்பாலான இளைஞர்களின் சாயம் சீக்கிரமே வெளுத்துவிடும். கூடுதலாகப் படிப்பதை பொறுத்தவரை பயன் உள்ளவற்றை எவரும் படிப்பதில்லை எனலாம். வேறு சில கேள்விகளும் எழுகின்றன. அறம், ஒழுக்கம், நடத்தை, எதில் நீ சிறந்து விளங்குகிறாய், உன் ஓய்வு நேரத்தை எப்படிப் பயன்படுத்துகிறாய் என்பன அக்கேள்விகள். 'நம்பிக்கை' மிகக் கொண்டுள்ள இளைஞர்களும் இளம் பெண்களும் குழப்பமான பார்வையோடு இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் என்ன விடை சொல்வது என்று விழிக்கிறார்கள்.

எதற்கும் உடனடியான ஆயத்த விடைகளையே, அதாவது வெற்றிபெற என்ன வழி என்றே அறிந்துகொள்ள விழைகிற அவர்களிடம் நல்லது இது என்று சொல்வதாலோ உங்கள் வாழ்க்கை இது என்று சொல்வதாலோ தம்மைப் பற்றி நமக்குத் தெரிவிக்க முன்வராத நிலையில் எந்தப் பயனும் இல்லை. இதில் எவ்வளவு பயிற்சி எடுத்துக்கொண்டால் நல்லது என்பதை அவர்கள் அறியவில்லை. ஒரேநாளில் அவர்கள் அடியோடு மாறி ஓயாத படிப்பாளிகளாகவும், கிதார் வாசிப்பவர்களாகவும் நட்சத்திர மட்டையடிப்பவராகவும் நடிகர்களாகவும் மாறவேண்டும் என்று சொல்ல வில்லை. அவர்களுடைய அரைவேக்காட்டுக் கதைகளை நேர்முகத் தேர்வு நடத்தும் எவரும் ஏற்பதில்லை.

இந்தியா முன்னேற முன்னேற, எதுவும் செய்யாமலே ஆடம்பரமான வாழ்க்கைக்கு ஆசைப்படும், சிந்தனைத் தெளிவற்ற ஒரு தலைமுறையை உருவாக்கி விட்டோம். அற விழுமியங்களோ, இலட்சியங்களோ இன்றி உருண்டோடும் கற்களை அதிக அளவில் உற்பத்தி செய்து விட்டதைப் போலத் தோன்றுகிறது. குறிக்கோளோ, ஈடுபாடோ, அற நோக்கோ இல்லாதவர்களாக அவர்கள் உள்ளனர். தம்மை அழுக்குப் படியாமல் பார்த்துக்கொள்வதா உருப்படியான பயனுடைய ஒன்றைச் செய்வதா இதில் எதைத் தேர்ந்தெடுப்பார்கள் எனில் முன்னதைத்தான். இளம் வயதில் சில சிறந்த குறிக்கோள்கள் இருத்தல் வேண்டும். உங்களுடைய கருத்துக்கள் பொருளற்றதாக இருந்த போதிலும் ஒரு நல்ல நோக்கத்திற்காக நீங்கள் செயல்பட விரும்புபவர்களாகத் தான் இளைஞர்கள் இருந்துவந்தனர். ஆனால் இப்போது நிலை தலைகீழாக மாறிவிட்டது. நல்ல நோக்கம், இலட்சியம் சார்ந்த ஈடுபாடே இன்றைய இளைஞர்களிடம் காண்பது அரிதாக உள்ளது. அவர்களிடம் நிலவும் புதிய மந்திரம் பணம் மட்டுமே என்பதை நன்கு ஒத்திகை பார்த்துக் கூறும் அவர்களது விடைகளைக் கேட்டதிலிருந்து தெளிவாகிறது. பொருளுடைய பயனுடைய எதையும் அவர்களிடம் பேசுபவர்கள் காலத்திற்குப் பொருத்தமற்ற கர்நாடகமாக அவர்கள் பார்வையில் விளங்குகிறார்கள்.

**வினாக்கள் :**

Q. 2(a) இளைஞர்கள் வேலையின்றி இருப்பதற்கான காரணங்கள் யாவை? 12

Q. 2(b) இந்த எழுத்தாளரிடமிருந்து இன்றைய இளந் தலைமுறை எதிர்பார்ப்பது என்ன? 12

Q. 2(c) ஆசிரியரின் கருத்துப்படி இன்றைய தலைமுறையின் ஒற்றை நோக்கம் யாது? 12

Q. 2(d) இன்றைய இளைஞரின் புதிய மந்திரமாகக் கருதப்படுவது யாது? 12

Q. 2(e) இலட்சியம் குறித்த இன்றைய இளந்தலைமுறையின் அணுகுமுறை யாது? 12

Q.3. **கீழ்க்காணும் பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்பிட வேண்டாம் :—** **60**

நாட்டுப் பாதுகாப்புத் துறையில் தற்சார்பை எய்துதலும் அயல்நாடுகளைச் சார்ந்திருக்கும் நிலையைக் குறைத்தலும் இன்றியமையாத் தேவை ஆகும், காரணம் இராசதந்திரம் மற்றும் பொருளாதாரக் காரணங்கள் ஆகும். நமது படை வீரர்களின் தேவையை நிறைவேற்றும் வகையில் கடந்த காலத்தில் அரசு இராணுவ தளவாடத் தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்தியுள்ளதோடு பொதுத்துறை நிறுவனங்களிலும் அதனைப் பெருக்கியும் உள்ளது. எனினும் இந்தியத் தனியார் துறையினரின் பங்களிப்பையும் மிகுதிப்படுத்தி பல்வேறு பாதுகாப்புக் கருவிகளை உற்பத்தி செய்யவும் கருவிகளின் திறத்தை மேம்படுத்தவும் வேண்டிய தேவை உள்ளது. 'இந்தியத் தயாரிப்பு' என்கிற வகையில் பல்வேறு உள்நாட்டுப் பொருள்களின் உற்பத்தியை ஊக்குவிக்கவும் மேம்படுத்தவும் இன்றியமையா நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அன்னிய செலாவணியை மிச்சப்படுத்துவதோடு தேசியப் பாதுகாப்பு அக்கறையும் சேர்ந்துள்ளதால் பிறதுறையை விடப் பாதுகாப்புத் துறைக்கான பொருள் உற்பத்தி, கருவி உற்பத்தி மேலான, முக்கியமான இடத்தைப் பெறுகிறது.

பாதுகாப்புத் துறையில் 'இந்தியத் தயாரிப்பு' என்பதன் பயனாளியாக அரசே விளங்குவதால் அரசின் கொள்முதல் கொள்கையைச் சார்ந்தே அமைகிறது. உள்நாட்டுக் கருவி உற்பத்தியை மேம்படுத்துவது என்னும் அரசின் கொள்கை பாதுகாப்பு பொருள் கொள்முதல் கொள்கையில் எதிரொலிக்கிறது என்பது தெளிவு. அதாவது '(அயல்நாட்டுப் பொருள்) வாங்கு' என்னும் நிலையைவிட '(இந்தியப் பொருளை) வாங்கு'; '(இந்தியப் பொருளை) வாங்கு, செய்' என்பவற்றுக்கு முன்னுரிமை தருவது அரசுக் கொள்கை ஆகும். வரும் காலங்களில் இறக்குமதி என்பது அரிதினும் அரிதான நிகழ்வாகவும் தேவைப்படும் முறைமைகளில் வளர்ச்சி, உற்பத்திப் பெருக்கம் ஆகியவற்றுக்கான முதல் வாய்ப்பு இந்தியத் தொழிற்சாலைகளுக்கே வழங்கப்படும். இன்றைய நிலையில் இந்தியத் தொழிற்சாலைகள் தேவையான தொழில்நுட்ப வசதியில்லாமல் இருக்கலாம். ஆனால் அவை அயல்நாட்டு நிறுவனங்களோடு கூட்டுச் சேர்ந்து தொழில்நுட்ப வசதி பெறுதல், தொழில்நுட்ப இடமாற்றம் செய்தல் போன்றவற்றை மேற்கொள்ள ஊக்குவிக்கப்படுகின்றன.

இன்று வரை உரிமம், அன்னிய முதலீட்டுக் கொள்கைக் கட்டுப்பாடுகள் போன்றவற்றின் காரணமாக உள்நாட்டுத் தொழிற்சாலைகள் பாதுகாப்புத் துறைக்குள் நுழைவதற்குப் பல தொடக்கநிலைத் தடைகள் இருந்தன. ஆனால் இப்போது எளிதாக இத்துறைக்குள் அடியெடுத்துவைக்கப் பல்வேறு கொள்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு நடைமுறை எளிமையாக்கப்பட்டுள்ளது. தாராளமயமாக்கம், அன்னிய நேரடி முதலீட்டை ஊக்குவிக்கிறது.

உரிமக்கொள்கையிலும் தாராளமாயமக்கம் நிகழ்ந்து இயந்திர உறுப்புக்கள், பாகங்கள், கச்சாப் பொருள்கள், சரிபார்ப்புக் கருவிகள், உற்பத்தி இயந்திரம் சார்ந்த உரிமங்கள் இனிமேல் பெறத் தேவை இல்லை என்கிற முறை நடைமுறைக்கு வந்துவிட்டது.

பாதுகாப்புத்துறையில் உள்நாட்டு, அயல்நாட்டு முதலீட்டாளர்களுக்கு ஒரு பெரிய வாய்ப்பு உண்டாகியுள்ளது. கொள்முதல், அன்னிய நேரடி முதலீடு உள்ளிட்ட முதலீடு, உரிமம், ஏற்றுமதி போன்றவற்றில் அரசு தேவையான கொள்கை முடிவுகளில் மாற்றம், சீர்திருத்தம் ஒருபுறம் செய்திருப்பினும் தொழிற்சாலைகளும் தொழில்நுட்பம், தேவையான முதலீடு தொடர்பானவற்றில் தக்க மாறுதல், மேம்பாடு செய்திட முன்வரவேண்டும். பாதுகாப்புத்துறை என்பது நிறைய முதலீடும் தொழில்நுட்பமும், புத்தாக்கமும் தேவைப்படும் ஒரு துறை ஆகும். ஆகவே தொழிற்சாலைகளும் தமது மனப்பாங்கை மாற்றிக்கொண்டு குறிகியகாலப் பயனைக் கருதாமல் நீண்ட காலப் பயனைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும். ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி, உற்பத்தித்திறனில் நவீன முறை ஆகியவற்றில் நாம் கவனம் செலுத்த வேண்டும். உள்நாடுத் தொழிற்சாலைகள் தம்மை உயர்த்திக் கொண்டு அரசு மற்றும் தனியார் சார்ந்த எல்லா வகைத் தொழிற்சாலைகளும் சிறப்பாகச் செயல்படத்தக்க சூழலை உருவாக்குவதும் இன்றியமையாதது. **(318 Words)**

**Q.4. பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க :— 20**

அரேபியாவின் பெரும்பகுதி பாலைவனம் ஆகும். மணலும் பாறையும் தவிர வேறு ஒன்றும் அங்கு இல்லை. பகல் வேளையில் வெறுங்காலோடு நடக்க முடியாத படி மணல் மிகுந்த சூடு உடையதாக உள்ளது. அப்பாலை வனத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக மிக்க ஆழத்தில் - சூரியனால் கூட வற்றவைக்க முடியாத மிக்க ஆழத்தில் நீரூற்றுக்கள் உண்டு இந்த நீரூற்றுக்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைவானவையே, மேலும் ஓர் நீரூற்றுக்கும் மற்றோர் நீரூற்றுக்கும் இடையே உள்ள தொலைவு மிகுதியாகும். எங்கு ஊற்று உள்ளதோ அங்கு உயர்ந்த அழகிய மரங்கள் உண்டு. அந்த ஊற்றைச் சுற்றி அம்மரங்கள் பசுமையாக நிழல் தந்து அவ்விடத்தைக் குளிர்ச்சியாக வைத்துள்ளன. அப்படிப்பட்ட இடம்தான் சோலை வனம் என அழைக்கப்படுகிறது.

நகரங்களில் வசிக்காத அரபுகள் வருடம் முழுவதும் அந்தப் பாலைவனத்தில்தான் வசிக்கிறார்கள். அவர்கள் எளிதாகவும் விரைவாகவும் அகற்றி ஒரு சோலை வனத்திலிருந்து வேறு சோலை வனத்திற்கு இடம் பெயர்ந்து செல்ல ஏற்ற வகையில் கூடாரங்கள் அடித்துக் குடியிருக்கின்றனர். தங்களுடைய செம்மறியாடுகளுக்கும், வெள்ளாடுகளுக்கும், ஒட்டகங்களுக்கும், குதிரைகளுக்கும் புல்லும் நீரும் வேண்டி இடப்பெயர்ச்சி செய்கிறார்கள். இந்தப் பாலைவன அரபுகள் இனிய பழுத்த அத்திப் பழங்களையும் பனைமரங்களின் மேல் வளரும் பேரீச்சம் மரங்களின் பழங்களையும் உண்கிறார்கள். அப்பழங்களையும் உலர வைத்து ஆண்டு முழுவதும் உணவாக உட்கொள்கின்றனர்.

இந்த அரபுகள் உலகத்திலேயே சீற்றம் மிக்க குதிரைகளை வைத்திருக்கிறார்கள். தனது குதிரையில் சவாரி செய்வதை ஓர் அரபு மிகுந்த பெருமையாகக் கருதுகிறான். தன் மனைவியையும் குழந்தைகளையும் நேசிப்பதைப்போல அந்தக் குதிரையும் அவன் நேசிக்கிறான். தனது அழகான குதிரையைவிட ஒட்டகம்தான் அவனுக்குப் பெரிதும்

பயன்படுகிறது. அளவில் பெரியதாகவும் வலிமை மிக்கதாகவும் ஒட்டகம் விளங்குகிறது. இரண்டு குதிரைகள் சுமக்கும் அளவிற்கு அல்லது அவற்றினும் மேலாக ஒட்டகம் சுமந்து செல்லும். 'பாலைவனத்தின் கப்பல்' என அவன் அடிக்கடி குறிப்பதைப் போல மைல்கள் கணக்கில் பாலைவனத்தில் பொருள்களின் சுமையையும் ஓட்டுவரின் சுமையையும் தாங்கிக்கொண்டு நடக்கிறது.

Q.5. **கீழ்க்காணும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதுக :—** **20**

Language and communication are something that children learn by talking to one another. But schools consider this an act of indiscipline. Instead, we have a special grammar class to learn language ! One educationist remarked, 'It is nice that children spend just a few hours at school. If they spend all 24 hours in schools, they will turn out to be dumb !' In most schools, teachers talk, children listen. The same is true for other skills also. Children learn a great deal without being taught, by tinkering and pottering on their own.

Changes in the school system, if they are to be of lasting significance, must spring from the actions of teachers in their classrooms, teachers who are able to help children collectively. New programmes, new materials and even basic changes in organisational structure will not necessarily bring about healthy growth. A dynamic and vital atmosphere can develop when teachers are given the freedom and support to innovate. One must depend ultimately upon the initiative and respectfulness of such teachers and this cannot be promoted by prescribing continuously and in detail what is to be done.

In education we can cry too much about money. Sure, we could use more, but some of the best classrooms and schools I have seen or heard of, spend far less per pupil than the average in our schools today. We often don't spend well what money we have. We waste large sums on fancy buildings, unproductive administrative staff, on diagnostic and remedial specialists, on expensive equipment that is either not needed, or underused or badly misused, on tons of identical and dull textbooks, readers and workbooks and now on latest devices like computers. For much less than what we do spend, we could make our classrooms into far better learning environments than most of them are today.

Q.6. (a) **கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக :—5**

(i) பட்டறிவு

(ii) காலவெள்ளத்தில்

(iii) ஓரளவுக்கு

(iv) பளிச்பளிச்சென

(v) படாரென

Q.6. (b) **கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக :—** **5**

(i) சிற்றகராதி

(ii) செந்தமிழ்

(iii) பேருந்து

(iv) புல்லாங்குழல்

(v) வேர்க்கடலை

Q.6. (c) **கீழ்க்காணும் சொற்களுக்கு எதிர்ச்சொல் தருக :—** 5

(i) இன்மை

(ii) ஆக்கம்

(iii) கிழவி

(iv) வளர்ச்சி

(v) நஞ்சு

Q.6. (d) **கீழ்க்காணும் சொற்களின் பிழை நீக்கி எழுதுக :—** 5

(i) வீனை வாசித்தாழ்

(ii) கென்டை மீண்

(iii) சுன்டக்காயி

(iv) வாலைப்பளம்

(v) குறங்கு மணம்

Q.6. (e) **கீழ்க்காணும் சொற்களின் பொருள் வேறுபாட்டினை ஏற்ற சொற்றொடர்களில் அமைத்துக் காட்டுக :—** 15

(i) வால் - வாழ் - வாள்

(ii) கலை - களை - கழை

(iii) வன்மை - வண்மை - வளமை

(iv) அரம் - அறம் - அடம்

(v) கன்னி - கண்ணி - கள்ளி

Q.6. (f) **கீழ்க்காணும் வாக்கியங்களை எதிர்மறையில் அமைத்து எழுதுக :—** 5

(i) அவனை நாளை சந்திப்பேன்

(ii) அவர்கள் எப்போதும் உழைத்துக்கொண்டே இருப்பார்

(iii) மாடுகள் மேய்ச்சலுக்கு வரும்

(iv) கிளி அழகாகப் பறக்கும்

(v) உனக்கு அந்த வேலை பிடிக்கும்.